# அரசு தொடர்பான அரசியல் எண்ணக்கருக்கள்



www.e-thaksalawa.moe.gov.lk

e-தக்சலாவ கல்விக்கூடம் The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

**தேர்ச்சி: 3** நானும் பிரசையொருவர் எனும் வகையில் அரசு தொடர்பான கோட்பாடுகளையும் விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அடிப்படைகளை உருவாககிக்கொள்ளவர்.

**தேர்ச்சி மட்டம்: 3.3** அரசுதொடர்பான அரசியல் எண்ணக்கருக்களை அடிப்படையாக கொண்டுள்ள நவீன அரசின் மாதிரி முறைகளை பகுத்தாய்வர்.

## 3.3.1 அரசும் இறைமையும்

அரசு என்பது " வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டதே ஆகும்"

இறைமை என்பது சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத பிரஜைகள் மற்றும் குடிகள் மீது செலுத்தப்படும் அரசுக்குரிய உயர்வான அதிகாரம் ஆகும்.

முதலில் அரசறிவியலினை பயன்படுத்தியவர் ஜீன்போடீன் (Jean Bodin) ஆவார்.
இறைமை இருவகைப்படும்.

- உள்ளிறைமை
- வெளியிறமை

**உள்ளிறைமை**

உள்ளிறைமை என்பது எந்தவொரு சுதந்திர அரசும் தமது அரசினுள் வாழும் மக்களின் அடிபணிவை பெற்றுக்கொள்வதற்கான சட்ட அதிகாரத்தை பெற்றுக்கொள்வது ஆகும்.

**வெளியிறைமை**

வெளியிறைமை என்பது வேறெந்த இறைமை அதிகாரத்திற்கும் கீழ்நிலைப்படாது இருத்தலாகும். இதன்படி இறைமைமிகு அரசு, தமது வெளிநாட்டுக்கொள்கைகளை அழுத்தம் இன்றி வைத்துக்கொள்வதற்கான


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இறைமை அதிகாரங்களானது நிலையானது, அனைத்தாண்மை வாய்ந்தது, பிரிக்கப்படமுடியாதது, கைமாற்றமுடியாதது, கையளிக்க முடியாதது ஆகும்.

இறைமை அதிகாரமானது உலகமயமாக்கலின் சவால்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தற்போது உலகில் பொதுக்கொள்கைகள் தேசியமட்ட இறைமை அலகுகள் மூலம் தீர்மானிக்கப்படுவதிலும் பார்க்க பெரும்பாலும் உயர்தேசிய அமைப்புகளினால் (Super National organizations)

தற்போது இறைமை மூலதனபாச்சலுடன் ஏற்பட்ட சந்தையினை மையப்படுத்தி உலக வர்த்தக அமைப்புக்கள், சர்வதேச மனிதஉரிமைகள், சட்டங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் குற்றங்கள் என்றால் என்ன என்பதனை தீர்மானிப்பதில் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

தற்கால தேசிய அரசுகள் என்பது உயர்தேசிய நிறுவனங்களில் எடுக்கப்படும் கொள்கைகளை தேசியமட்டத்தில் நடைமுறைப்படுத்தும் முகவர்களாக மாறியுள்ளது. இந்த பின்புலத்தினுள் பிரபல்யமான அரசுகளில் இறைமை விருத்தியடைந்துள்ளதோடு நவீன அரசுகளில் இறைமை அடித்துச்சென்றுள்ளமை தெளிவாகின்றது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 3.3.2 அரசும் பிரசையும்

- **அரசு** என்பது வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டது ஆகும்
- **பிரசை** என்பது நகரத்தில் வாழ்பவன் என்பதாகும். அதாவது அரசின் உறுப்பினர் என்றுபொருட்படும்.

- அரிஸ்டோடிலின் கருத்துப்படி பிரஜை என்பவன் செயற்பாடுமிக்க ஒரு பிராணியாகும். ஆனால் இன்றைய நிலையில் அரசின் செயயற்பாடுகளில் அவன் நேரடியாக பங்குபற்றுவது என்பது முடியாது. இதனால் பிரதிநிதிகள் என்போர் பொருப்புக்கூறக்கூடிய பிரஜை என்பவர். இதன் கருத்தாவது பிரஜைகள் பொதுத்தீர்மானங்களை எடுப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளினூடாக தொடர்புபடுகின்ற பொறுப்புக்கூறும் உத்தியோகத்தர் ஆகும்.
- தற்போது அரசு மற்றும் பிரசைகளுக்கிடையிலான தொடர்புகளுக்கு இரு முக்கியமான பண்புகள் காணப்படுகின்றன.
  - பிரசைகளின் அரசியல் உரிமைகள்
  - பிரசைகளின் அரசியல் கடமைகள்
- அரசொன்றின் ஆள்புலத்தில் வாழ்கின்றவர்களுக்கு பிரசார உரிமை வழங்கக்கூடியதும் இல்லாதொழிக்க கூடியதுமான ஒரு நிறுவனம் அரசாகும். உண்மையில் நடைமுறையில் அரசை நிருவகிப்பவர்களால் தீர்மானிக்க முடியும்.
- T.H.Marshall " சமூகபிரசாவுரிமை" என்ற எண்ணக்கரு பற்றி குறிப்பிட்டுள்ளார். இவர்களின் கருத்துப்படி " தொழிலொன்றை செய்வதற்கு வீடொன்றை உரிமையாக்கிக்கொள்வதற்கான உரிமை" என்பன சமூ கபிரசை என்பதன் கருத்தாகும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசுக்கு பிரசைகள் ஏன் அடிபணிவை காட்டவேண்டும் என அரசறிவாளர்கள் முன்வைத்துள்ள கருத்துக்கள்

அரிஸ்ரோடலின் கருத்துப்படி " அனைத்து பிரஜைகளுக்கும் நலன்புரிவாழ்ககையை அமைத்துக் கொடுப்பது அரசு" என்றார்.

ரூசோவின் கருத்துப்படி " அரசு பொதுவிருப்பத்தினை பிரதிபலிப்பதோடு அதன்மூலம் பொது சித்தத்தை பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது. இதனால் பிரசை அரசுக்கு அடிபணிய வேண்டும்" என்றார்.

சமூக ஒப்பந்த கோட்பாட்டாளரின் கருத்துப்படி " பிரசைகள் அரசை உருவாக்கிக்கொண்டதோடு அடிபணிவை காட்டுவதற்கு உடன்பாடு கொண்டனர்" என்கிறனர்.

லிபரல்வாத கோட்பாட்டாளர்களின் கருத்துப்படி " பிரசைகள் இயற்கை உரிமைகளை பாதுகாத்து கொடுப்பது அரசு என்பதால் பிரசைகள் அரசுக்கு அடிபணியவேண்டும்" என்கிறனர்.

தொகுப்பு :- திரு.நடேசபிள்ளை பிரதீபன். ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.ரா.சுகுமார் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (யா/ஏழாலை மகாவித்தியாலயம்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 3.3.3 அரசு, அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறை என்பவற்றிற்கான வேறுபாடுகள்

### அரசு

அரசு என்பது வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டது ஆகும்

### அரசாங்கம்

அரசின் அல்லது மக்களின் விருப்பங்களை கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்கு கொண்டுவரும் பிரதிநிதி ஆகும்.அரசு என்பது வரையறுக்கப்பட்ட பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டது ஆகும்.

- கோட்பாட்டுரீதியான அரசை பிரிக்கமுடியாது. கண்ணுக்கு புலப்படாதது ஆனால் அரசாங்கம் நடைமுறை செயற்பாட்டின் புலனிடல் நிறுவனமாகும்.
- அரசாங்கம் என்பது அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரதிநிதி மட்டுமாகும்.
- அரசாங்கம் முழுச்சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஆனால் அரசாங்கம் குடிமக்களின் ஒரு பகுதியினரின் ஆதரவைப்பெற்று கொள்ளும் அரசியல் நிறுவனமாகும்.
- அரசு மாற்றமுறாத நிலையான நிறுவனமாகும். ஆனால் அரசாங்கம்,அரசுக்கு அரசு வேறுபடும்.
- அரசு ஒரு பரிபூரணகூறாக இருக்கும் போது அரசாங்கம் அரசின் ஒரு பகுதி மட்டுமே ஆகும்.
- அரசு இறைமையின் உரிமையாளன் ஆனால் அரசாங்கம் அரசினால் ஒப்படைக்கப்படும் அதிகாரத்தை மட்டும் பெறுகின்றது.
- அரசின் இருப்புக்கு நிச்சயமான எல்லை கொண்ட நிலப்பிரதேசம் அவசியமாகும். ஆனால் அரசாங்கம் அரசின் எல்லைக்கு அப்பால் அல்லது வெளியேயும் அமைக்கப்படலாம்.
- குடிமகன் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழ முடியாது. ஆனால் அரசாங்கத்திற்கெதிராக கிளர்ந்தெழலாம்.

தொகுப்பு :- திரு.நடேசபிள்ளை பிரதீபன். ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.ரா.சுகுமார் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (யா/ஏழாலை மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஆட்சிமுறை (Regime)

ஆட்சிமுறை என்ற எண்ணக்கரு அரசாங்கம் என்பதற்கு சற்று நெருக்கமுடையதாகும். அரசாங்கம் என்பது அரசின் செயற்பாடுகளை செய்வதற்கு பொதுமக்களால் நியமிக்கப்படும் நிறுவன கட்டமைப்பு ஆகும்.

ஒவ்வொரு அரசாங்கமும் தமது கருத்தியல்கள், சமூக அடிப்படை மற்றும் தலைமைத்துவம் தொடர்பில் காணப்படும். விசேடதன்மையினை அடிப்படையாகக் கொண்டு அடையாளப்படுத்தும் போது ஆட்சிமுறை என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது.

**உதாரணம்**

- அரசாங்கத்தின் தலைமைத்துவத்திற்கு ஏற்ப அடையாளப்படுத்தல்.

  உ.ம்: ராஜபக்ஷகட்சி, ஜயவர்த்தன ஆட்சி, இந்திகாந்தி ஆட்சி.

- அரசாங்கத்தின் ஒழுங்கமைப்பிற்கேற்ப உருவாக்கும் ஆட்சி.

  உ.ம்: ஒற்றையாட்சி, கூட்டாட்சி.

- அரசாங்கத்தின் கருத்தியலின் அடிப்படையில்.

  உ.ம்: நலன்புரிவாதஆட்சி, சமவுடமைவாத ஆட்சி, அனைத்தாண்மைவாத ஆட்சி.

**வினாக்கள்**

(1) இறைமை இருவகைப்படும், அவை யாவை?

(2) அரசுக்கு பிரஜைகள் அடிபணிவை காட்ட வேண்டும் என கூறும் கோட்பாளர் இருவரைப்பெயரிடுக.

(3) அரசும், அரசாங்த்தின் வேறுபாடுகளை ஆராய்க.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk